



சென்னை தலைமைச் செயலகத்தில், நேற்று (27.06.2025), நெடுஞ்சாலைத்துறையின் தலைமைப் பொறியாளர்களின் பணிகள் தொடர்பாக. பொதுப்பணிகள், நெஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, ஆய்வு செய்து சில அறிவுரைகள் வழங்கினார்கள். இந்த ஆய்வுக் கூட்டத்தில் நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் டாக்டர் இரா.செல்வராஜ் பங்குப் பெற்றார்.





பல்லாவரம் சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கலந்து ஆலோசனைக் கூட்டம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் மண்டல தேர்தல் பணிகள் பொறுப்பாளர் ஆ ராசா எம்.பி கழக நாடாளுமன்ற மக்களவை குழு தலைவர் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு தேர்தல் களப்பணி தொடர்பாக ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்கள் முன்னதாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அதிக வாக்குகளை பெறும் வட்டக் கழகச் செயலாளர்கள் பகுதி கழகச் செயலாளர்களுக்கு மோதிரம் அணிவிக்கப்படும் அறிவிப்பு கிணங்க இ.கருணாநிதி எம்.எல்.ஏ ஏற்பாட்டில் பகுதி கழகச் செயலாளர் வே.கருணாநிதி இ.ஜோசப் அண்ணாதுரை த.ஜெயக்குமார் இ.எஸ்.பெர்னார்ட் ஏ.கே.கருணாகரன் ஒன்றிய செயலாளர் ஜி.கே .ரவி மற்றும் வட்ட கழக செயலாளர்கள் அப்பாஸ் டி.எச்.பிரான்சிஸ் பால், சாலாஎன்கிற சுகுமார் ,ஆகியோர்களுக்கு ஆ.ராசா எம்.பி டி.ஆர்.பாலு எம்.பி அமைச்சர் தா.மோ. அன்பரசன்.ஆகியோர் சால்வை அணிவித்து ஒரு சவரத்தில் தங்க மோதிரம் அணிவித்து கௌரவித்தார்கள் அப்பொழுது கழகத் தீர்மானம் செயலாளர் மீ.அ வைத்தியலிங்கம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ .தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ் தொமுச இரா.பொன்ராம் தகவல் தொழில்நுட்பணி மாநில துணைச் செயலாளர்கள் அ.தமிழ்மாறன் என்.நவீன் ஆகியோர் உடன் இருந்தனர்.

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு

# பருத்தியை தரம் பிரித்து கொண்டு வந்து விற்பனை செய்து பயன் பெறலாம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜூன் 28-

தமிழ்நாட்டில் பருத்திக்கு உரிய விலை பெற விவசாயிகள் பருத்தியை தரம்பிரித்து ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்குக் கொண்டுவந்து விற்பனை செய்து பயன்பெற வேண்டும் என்று தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:

தமிழ்நாட்டில் பருத்தி சராசரியாக 3.66 இலட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டு 52,700 மெட்ரிக் டன் பஞ்சு உற்பத்தி செய்யப்படுகிறது. 2024-25ஆம் ஆண்டில், மூன்றாவது முன்மதிப்பீட்டின்படி தமிழ்நாட்டில் 2.55 இலட்சம் ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு 36,000 மெட்ரிக்டன் பஞ்சு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இதில் தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை திருவாரூர் ஆகிய டெல்டா மாவட்டங்களில் நெல் தரிசில் பருத்தி 54,700 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டு 7,700 மெட்ரிக்டன் பஞ்சு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஆர்.சி.எச். 659 பிஜி II, ஆர்.சி.எச். 386 பிஜி II, சூப்பர் காட் 115 பி.ஜி. II, போன்ற பருத்தி இரகங்கள் அதிக அளவில் பயிரிடப்பட்டன. நடப்பு ஆண்டில் 4.4 இலட்சம் ஏக்கரில் பருத்தி சாகுபடி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**1,511 மெட்ரிக் டன் பருத்தி பரிவர்த்தனை!**

இந்நிலையில், தற்போது டெல்டா மாவட்டங்களிலுள்ள 17 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 14,115 விவசாயிகள் மற்றும் 26 வர்த்தகர்கள் பருத்தி பரிவர்த்தனை செய்திட பதிவு செய்துள்ளனர். இதுவரை, 9 கோடி ரூபாய் மதிப்பிலான 1,511 மெட்ரிக் டன் பருத்தி பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது. பருத்தியின் தரத்திற்கேற்ப குவிண்டால் ஒன்றிற்கு அதிகபட்ச விலையாக ரூ.7,700, குறைந்தபட்ச விலையாக ரூ.4,111, சராசரி விலையாக ரூ.5,850 என்ற அளவில் பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் தொடர்ந்து பருத்தி பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இயல்பாக பருத்தியின் தரத்திற்கேற்ப ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வியாபாரிகளால் மின்னணு தேசிய வேளாண் சந்தை வாயிலாக (eNAM), மறைமுக ஏலமுறையில் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இதன்படி தமிழ்நாடு முழுவதும் இதுவரை 1,976 மெட்ரிக் டன் பருத்தி பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

பருத்தியின் தரத்திற்கேற்ப விலை நிர்ணயம் செய்யப்படுவதால் பருத்தியின் தரத்தை நிர்ணயிக்கும் காரணிகளான ஈரப்பதம் (Moisture), இழை நீளம் (staple length), இழையின் நுண்மைத்தன்மை (Micronaire), முதிர்ச்சி மற்றும் நீண்ட இழை தரக்கூடிய பருத்தி இரகங்கள் குறித்து வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய பருத்தி வாரியமும் தமிழ்நாட்டில் பருத்தி கொள்முதல் செய்ய வலியுறுத்தப்பட்டுள்ளது.

விவசாயிகள் பருத்தியில் இலாபகரமான விலைபெற பருத்தியைத் உலர்த்தி, தரம்பிரித்து அருகிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு கொண்டுவருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மாநில அலுவலர்கள் டெல்டா மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று களஆய்வு மேற்கொண்டு, விவசாயிகள் மற்றும், வியாபாரிகளுடன் கூட்டங்கள் நடத்தி, பருத்திக்கு இலாபகரமான விலை கிடைக்கச்செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பருத்தி விவசாயிகளுக்கு உரிய விலை கிடைத்திட அனைத்து நடவடிக்கைகளும் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இராயபுரம் மண்டலத்தில்

# மகளிருக்கான இலவச திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையம்!

## மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூன் 28-

மேயர் அவர்களின் நிதி நிலை அறிக்கை அறிவிப்பின் படி, மகளிருக்கு சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்திடும் வகையில், இராயபுரம் மண்டலத்தில் இலவச திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையத்தினை மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று திறந்து வைத்து, பயிற்சியினைத் தொடங்கி வைத்தார்.

மேயர் அவர்களின் 2025-26ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை அறிவிப்பில், மகளிருக்கு சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்திடும் வகையில், இதற்கென உருவாக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி, (Standard Operating Procedure) திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளான தையல் பயிற்சி, எம்பிராய்டரி, ஆரி வேலைப்பாடுகள் மற்றும் கணினிப் பயிற்சிகள் (Tally) உள்ளிட்ட திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் இலவசமாக வழங்கிட ஏதுவாக, ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு மையம் அமைத்திட மண்டலம் ஒன்றுக்கு ரூ.50 இலட்சம் வீதம் 15 மண்டலங்களுக்கு ரூ.7.50 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள மகளிருக்கு சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்திடும் வகையில், இலவச திறன் மேம்பாட்டுப் பயிற்சியினை 15 மண்டலங்களிலும் தொடங்கி வைக்கும் விதமாக, நேற்று (27.06.2025) இராயபுரம் மண்டலம், வார்டு 51, பழைய வண்ணாரப் பேட்டை, கல்லறை சாலையில் உள்ள சென்னை தொடக்கப் பள்ளியில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையத்தினைத் திறந்து வைத்து, முதற்கட்டமாக தையல் பயிற்சி பெறும் மகளிருக்கு தையல் பயிற்சிக்கான பொருட்களின் தொகுப்பினை வழங்கினார்.

ஒவ்வொரு மண்டலத்திலும் உள்ள பயிற்சி மையங்களில் 115 பெண்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, தினமும் காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். இந்தப் பயிற்சி வகுப்பில் துணிகளை சரியான முறையில் வெட்டுதல் மற்றும் தைத்தல், ஆரி மற்றும் எம்பிராய்டரி வேலைப்பாடுகள் உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மையத்திற்கும் 40 தையல் இயந்திரங்கள் வரை வழங்கப்பட்டு, 5 அனுபவமிக்க பயிற்சியாளர்களால் பயிற்றுவிக்கப்படுகிறது. இதன் அடுத்தக்கட்டமாக இம்மையங்களில் கணினிப் பயிற்சியும், அழகுக்கலைப் பயிற்சியும் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) எம்.பிரதிவிராஜ், நிலைக்குழுத் தலைவர் (கல்வி) பாலவாக்கம் த.விசுவநாதன், மண்டலக்குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் திருமதி நிரஞ்ஜனா ஜெகதீசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மகளிருக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையங்களின் விவரம்:

1. திருவொற்றியூர்- திருவொற்றியூர், தியாகி சத்திய மூர்த்தி நகர், சென்னை நடுநிலைப்பள்ளி.
2. மணலி - மணலி, சென்னை தொடக்கப்பள்ளி.
3. மாதவரம் - கொளத்தூர், லட்சுமிபுரம் சென்னை தொடக்கப்பள்ளி.
4. தண்டையார்பேட்டை - வியாசர்பாடி, சர்மா நகர் சென்னை தொடக்கப்பள்ளி.
5. இராயபுரம் - கல்லறை சாலை, சென்னை தொடக்கப் பள்ளி.
6. திரு.வி.க.நகர் - பெரம்பூர், எம்.எச்.சாலை, சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி.
7. அம்பத்தூர் - பாடிக்குப்பம், சென்னை உயர்நிலைப்பள்ளி.
8. அண்ணாநகர் - அமைந்தகரை, மஞ்சக்கொல்லை, சென்னை தொடக்கப்பள்ளி.
9. தேனாம்பேட்டை - திருவல்லிக்கேணி, தைஃபூன் அலி கான், சென்னை உயர்நிலைப் பள்ளி.
10. கோடம்பாக்கம் - ரங்கராஜபுரம், சென்னை தொடக்கப்பள்ளி.
11. வளசரவாக்கம் - செட்டியார் அகரம், சென்னை தொடக்கப்பள்ளி.
12. ஆலந்தூர் - ஆலந்தூர், சென்னை உயர்நிலைப்பள்ளி.
13. அடையாறு - கோட்டூர், சென்னை உயர்நிலைப்பள்ளி.
14. பெருங்குடி - மடிப்பாக்கம், சென்னை நடுநிலைப்பள்ளி.
15. சோழிங்கநல்லூர் - எழில்நகர், சென்னை நடுநிலைப்பள்ளி.

மேற்கண்ட பயிற்சி மையங்களில் இலவசமாக பயிற்சிபெற விரும்பும் மகளிர் அந்தந்தப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களை தொடர்பு கொண்டு பயன் பெறலாம்.

## சென்னை வடக்கு மாவட்டம்

# பெரம்பூர், இராயபுரம், ஆர்.கே. நகர் தொகுதிகளில் BLA-2, BDA ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, "ஓரணியில் தமிழ்நாடு" இணையவழி உறுப்பினர் சேர்க்கை பயிற்சி முகாம் சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர், இராயபுரம், ஆர்.கே.நகர் தொகுதிகளில் கீழ்க்கண்ட நாட்களில் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற உள்ளது.

| நாள் / நேரம் | பகுதி | இடம் | தலைமை |
|---|---|---|---|
| 28-06-2025 மாலை-4.00 மணி | இராயபுரம் கிழக்கு | அறிவகம் இராயபுரம் | இரா.செந்தில் குமார் பகுதி செயலாளர் |
| | இராயபுரம் மேற்கு | | வ.பெ.சுரேஷ் பகுதி செயலாளர் |
| 29-06-2025 காலை 9.00 மணி | பெரம்பூர் தெற்கு | பிரணிதா மஹால் எத்திராஜ் சாமி சாலை, எம்.ஆர்.நகர் | க.ஜெயராமன் பகுதி செயலாளர் |
| 29-06-2025 காலை 10.00 மணி | ஆர்.கே.நகர் கிழக்கு | வாணி மஹால் திருவொற்றியூர் நெடுஞ்சாலை | இரா.இலட்சுமணன் பகுதி செயலாளர் |
| 29-06-2025 மாலை-4.00 மணி | பெரம்பூர் வடக்கு | பிரணிதா மஹால் எத்திராஜ் சாமி சாலை, எம்.ஆர்.நகர் | அ.முருகன் பகுதி செயலாளர் |
| 29-06-2025 மாலை-5.00 மணி | ஆர்.கே.நகர் மேற்கு | நாடார் திருமண மண்டபம் நேதாஜி நகர் | S.ஜெபதாஸ் பாண்டியன் பகுதி செயலாளர் |

மேற்கண்ட கூட்டங்களில், நாடாளுமன்ற உறுப்பினர், அந்தந்த தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள் மற்றும் பாகமுகவர்கள் (BLA-2), பாக சமூக வலைதளமுகவர்கள் (BDA) மற்றும் தகவல் தொழில்நுட்ப நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கின்றேன்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**

பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

# சென்னை வடக்கு மாவட்டக் கழக கூட்டம்!

## மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை வடக்கு மாவட்டகழக கூட்டம் இன்று 28-06-2025 சனிக்கிழமைகாலை 10.30 மணியளவில் இராயபுரம் அறிவகத்தில் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.வெற்றிவீரன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் Dr.கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் இரா.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழுஉறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் வட்ட கழக செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள்-துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள் வருகை.

2. கழக ஆக்க பணிகள்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**

பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.





தாம்பரம் தொகுதிக்கு உட்பட்ட தாம்பரம் மாநகரத்தில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனையின் ஒரு மயில் கல்லாக 46,வது வார்டு பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று வேளச்சேரி மெயின் ரோட்டில் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ. தொகுதி நிதியிலிருந்து ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் பேருந்து நிறுத்தம் மற்றும் மாநகராட்சி பொது நிதியிலிருந்து ரூபாய் 6 லட்சம் மதிப்பீட்டில் சிக்னல் அமைத்துக் கொடுத்ததை தாம்பரம் மாநகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ் 5வது மண்டல குழுத்தலைவர் எஸ்.இந்திரன், 4,வது மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ்,ரமணிஆதிமூலம் மற்றும் கழக நிர்வாகிகளும் கழகத் தோழர்களும் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பழ. சுப்பையா

### ஜூன் 28 (2022)



**இளமைக் காலம் முதலே கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**கிளைச் செயலாளர், ஊராட்சி செயலாளர், இரண்டு முறை அறந்தாங்கி ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட இலக்கிய அணி பொருளாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.**

**இடையாத்தூர் ஊராட்சி மன்ற தலைவராகவும், ஒன்றிய பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**